# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.159/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 17 |
| Name | : திரு. அசோகன் |
| Father/Husband's Name | : கோபாலன் |
| Village | : காவல் ஆய்வாளர் |
| Taluk | : காத்திருப்போர் பட்டியல் (வடக்கு மண்டலம்) சென்னை |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னை வடக்கு மண்டலம் காத்திருப்போர் பட்டியல், சென்னையில் பணியாற்றி வருகிறேன். கடந்த 31.12.2022 அன்று செங்கல்பட்டு வட்ட ஆய்வாளராக பணியிலிருந்த போது பாலூர் காவல் நிலைய குற்ற எண்.252/2022 பிரிவுகள் 279, 337 @ 279, 304(A) இதச வின் வழக்கு விசாரணையை எனது பார்வைக்கு 31.12.2022 அன்று வைத்ததை விசாரணைக்கு எடுத்து கொண்டு இவ்வழக்கு விபத்தில் இறந்த நபரான கலைவாணன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையை சாட்சிகள் சீனிவாசன், ஹரிஷ், சங்கர், சிலம்பரசன் ஆகியோர்கள் முன்னிலையில் மேற்கொண்டேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கு சம்மந்தப்பட்ட எதிரியை காவல் நிலையத்தில் வைத்து 03.01.2023 காலை 12.00 மணியளவில் கைது செய்து தக்க பிணையில் அனுப்பினேன்.

இவ்வழக்கு விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 11 AL 5526 என்ற லாரியை 03.01.2023 அன்று மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன். இறந்த நபரின் வாகனமான TN 03 K 1911 இருசக்கர வாகனத்தினை 05.02.2023 அன்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு முதலுதவி செய்த மருத்துவர் சதீஷ்ராஜன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு பெற்றேன். பின்னர் இவ்வழக்கு விபத்தில் இறந்த நபரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கார்த்திகேயன் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். மேலும் இறப்பு குறித்து உறுதி செய்த மருத்துவரான திருவிக்ரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையானோரை விசாரிதது வாக்குமூலம் பதிவு செய்தேன். பட்டியல் சாட்சிகள் 6 முதல் 10 வரையானோர் எனக்கு முன்பிருந்த விசாரணை அதிகாரியிடம் கூறியது போல என்னிடம் கூறியதால் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து இதச பிரிவுகள் 279, 304(ஏ) வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கில் உடனடியாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா என்று கேட்டால் 20.03.2023 ல் வழங்கப்பட்டுள்ளது. 3 மாத கால தாமதத்துடன் முதல் தகவல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கான காரணங்களை இறுதி அறிக்கையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. விபத்து பதிவேட்டில் காயம்பட்ட நபரை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தவர் அவரது மனைவி ஹீரா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஹீரா உதவி ஆய்வாளரிடம் அளித்த வாக்குமூலத்தில் சம்பவயிடத்தில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்சில் காயம்பட்டவரை அழைத்து சென்றதாக கூறியுள்ள விவரத்தை குறித்து விசாரணை மேற்கொண்டேனா என்றால் இல்லை.

அசா 2 சீனிவாசன் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து போலிசார் விசாரித்ததாக கூறியுள்ளார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. அசா 3 விபத்தை பற்றி தனக்கு யார் தெரிவித்தார்கள் என்று தெரியாது என நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் என்னிடம் வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை தான் கூறியுள்ளார். அசா 4 சிலம்பரசன் பிரேத விசாரணை நடந்த இடத்தில் தான் தன்னை விசாரணை செய்ததாக கூறியுள்ளார்

என்று சொன்னால் அது தான் உண்மை. அசா 6 சங்கர் செவிவழி சாட்சி என்று சொன்னால் சரிதான். அசா 7 தூயவன் என்பவருடைய வாக்குமூலமானது கணினி தட்டச்சு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அவர் நீதிமன்றத்தில் உதவி ஆய்வாளர் வாக்குமூலத்தை கையால் எழுதியதாக கூறியுள்ளார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. அசா 8 சதீஷ் சம்பவத்தன்று மாலை 05.30 மணிக்கு தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. நான் இறுதி அறிக்கை தயார் செய்யும் போது மேற்படி சிறுசிறு விவரங்களை நான் பார்க்க தவறிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

அசா 14 சுரேந்தர் நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில் தான் இரயில்வே கேட்டை தாண்டி கடைக்கு செல்லும் போது விபத்து நடந்திருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் எனது வாக்குமூலத்தில் நேரில் பார்த்தாக தான் கூறியுள்ளார். அசா 14 சுரேந்தர் நீதிமன்றத்தில் சம்பவயிடத்திலேயே கலைவாணன் இறந்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் அந்த விவரம் தவறானது. மேலும் அவர் நீதிமன்றத்தில் லாரியின் எண் தெரியாது என்று கூறியுள்ளார் என்று சொன்னால் அவர் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் அந்த விவரத்தை கூறியுள்ளார். லாரியை ஓட்டி பவந்த நபரை தான் பார்க்கவில்லையென்று அசா 14 நீதிமன்றத்தில் கூறியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல அவர் என்னுடைய வாக்குமூலத்தில் பார்த்ததாக தான் கூறியுள்ளார். அசா 14 நீதிமன்றத்தில் டமால் என்று சத்தம் கேட்டு சென்று பார்த்ததாக கூறியுள்ளார் எனது வாக்குமூலத்தில் அவ்வாறு கூறியுள்ளாரா என்று கேட்டால் இல்லை. காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு சம்பவயிடம் சென்றுள்ளார்கள் என்று கேட்டால் மாலை 05.30 மணிக்கு.

10 நிமிடத்தில் போலிசார் சம்பவயிடத்திற்கு சென்றுவிட்டதாக அசா 14 கூறியுள்ளார் என்று சொன்னால் போலிசார் சென்றிருப்பார்கள். அந்த விவரத்தை நான் இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வழக்கு சம்பந்தப்பட்ட வாகனத்தை அனுப்பி வைத்த விவரங்கள் கொண்ட பதிவேடுகள் பராமரிப்பது உண்டா என்று கேட்டால் உண்டு. அந்த ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த விவரங்கள் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது கீழ்நிலை அதிகாரி விசாரணை செய்த வழக்கினை நான் சரிவர மேல் விசாரணை செய்யாமல், எதிரியின் மீது தவறுதலான குற்ற அறிக்கை தாக்கல் செய்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றாலும், எதிரியின் கவன குறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றாலும், நான் சரிவர சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், சரியான ஆதாரங்களை தருவிக்கவில்லையென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.